அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 05/2001

எனது இல: 11/572/ஈ/3
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு,07
2001 மார்ச் மாதம் 08 ஆந் திகதி

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

**<u>மின்சாரத்தை சிக்கனமாக பாவித்தல்</u>**

2001 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் பணிக்கப்பட்டுள்ள 2001 ஆண்டு 01 ஆம் இலக்க அவசரகால (மின்சாரத்தை பாவித்தல் அல்லது பாவித்தலை கட்டுப்படுத்துதல்) கட்டளைகளின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது,

02, மேற்படி அவசரகால ஒழுங்குவிதிகள் கீழ்க்காட்டப்படுகின்றன,

**ஒழுங்குவிதி**

1, இவ்வொழுங்குவிதிகள் 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (மின் சக்தியினைப் பயன்படுத்தலையும் பிரயோகித்தலையும் மட்டுப்படுத்ததுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படாலாம்,

11, ஆளெவரும் இந்த ஒழுங்குவிதிகள் வலுவில் தொடர்ந்திருக்கும் பொழுதும் அத்துடன் அவரால் இலங்கை மின்சார சபையுடன் அல்லது லங்கா இலெக்ட்றிசிற்றி கம்பனி(பிரைவேட்)லிமிட்டடுடன் செய்து கொண்டிருக்கும் ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் எவ்வாறிருப்பினும் விடயத்திற்கேற்ப சபையால் அல்லது கம்பனியால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தை-

(அ) களியாட்ட இடங்களை சந்தையிடங்களை ஒளியேற்றுவதற்கு அல்லது எவையேனும் கட்டிடங்களை ஒளிமயப்படுத்துவதற்கு:

(ஆ) பெயர்பலகைகளை, கடைச்சாளரத்தை அல்லது 'ரூற்றலங்காரங்களை ஒளியேற்றுவதற்கு: அல்லது

(இ) வளிச்சீராக்கிகளை செயற்படுத்துவதற்கு

என பயன்படுத்துதலோ, பிரயோகித்தலோ ஆகாது,

111, மேலே 2 ஆம் ஒழுங்குவிதியின் பந்திகள் (அ), (ஆ) அல்லது (இ) என்பவற்றில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு செய்ய விரும்புகின்ற ஆளெவரும் மேற்கூறப்பட்ட நோக்கங்கள் எதற்காகவும் மின்சாரத்தை,மின் உற்பத்தி இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உண்டுபண்ணலாம்,

1V, எவ்வாளின் வளவுக்கு, விடயத்துக்கேற்றாற்போல, இலங்கை மின்சார சபையினால் அல்லது லங்கா இலெக்டரிசிற்றி கம்பனி(பிரைவேட்) லிமிடெட்டால் மின்சாரம் வழங்கப்படுவதுடன், அவர் அகத்தமைந்த மின்னுற்பத்தி இயந்திரத்தைப் பயன்படுத்துகின்றாரோ அல்லது வைத்திருக்கின்றாரோ, அவ்வாள், அவரது வளவுக்கு மின்சாரம் அவ்வாறு வழங்கப்படுகின்றதென்பதை எவ்வாறிருப்பினும், எவ்வெப்போதெல்லாம் இயலுமோ அப்போதெல்லாம் தமது வளவுக்கான மின்சார விநியோகத்துக்காக அத்தகைய மின்னுற்பத்தி இயந்திரத்தைத் தொடர்ந்து பயன்படுத்துதல் வேண்டும்,

v, தெருவிளக்குகளை ஏற்பாடு செய்வதற்குப் பொறுப்பான அதிகாரிகள் ஒவ்வொரு நாளும் அத்தகைய விளக்குகள் பி,ப, 7 மணிக்கு ஏற்றப்பட்டு மறுநாள் மு,ப, 5,30 மணிக்கு அணைக்கப்படுதலை உறுதிப்படுத்துதல் வேண்டும்,

vi இவ்வொழுங்கு விதிகளை மீறும் ஆளெவரும் முன்னறிவித்தலின்றி தமது மின்விநியோகம் விடயத்துக்கேற்ப தற்காலிகமாகத் துண்டிக்கப்படுவதற்கு அல்லது இழக்கப்படுவதற்கு ஆளாக நேரிடும்,

03. மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இவ்வேளையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அவசரகால ஒழுங்குவிதிகளை செயல்படுத்துவதில் தாங்களும், தங்களின் கீழ்வரும் நிறுவனத்தினரும் பொறுப்பாயிருக்க வேண்டுமென்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறேன்,

ஒப்பம்: எம்.என்.ஜுனைட
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு